**தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூலை 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்டெம்பர் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறாக நிதியல்லாத சொத்துக்களுக்கான மீதி, நிதி நிலைமைக்கான கூற்றிலுள்ள நிதியல்லாத சொத்துக்களுக்கான கூற்றின் படி ரூபா 430,274,243 ஆக இருந்ததுடன் அரச கணக்குகள் திணைக்கள "**SA82**" அறிக்கையின் படி ரூபா 380,465,465 ஆனதினால் ரூபா 49,808,778 வேறுபாடு ஆனதும் நிதியல்லாத சொத்துக்களுக்கான மீதிகளில் மேற்படி வேறுபாடுகள் தொடர்பாக இலக்கம் 2021/02 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டலின் 3.9 பந்தியின் ஆலோசனைப்படி திணைக்கள புத்தகங்களின் மீதிகளினை திறைசேரிக் கணக்குக் கூற்றின் தனிப் பேரேட்டுடன் ஒப்பிட்டு, தீர்க்கப்பட்டு நிதியல்லாத | அரச கணக்குகள் திணைக்களத்தின் **SA82** அறிக்கையில் மற்றும் நிதிக் கூற்றுக்களில் **9160** கீழுள்ள பெறுமானங்களுக்கிடையே வேறுபாடாக காட்டப்பட்டுள்ள ரூபா **49,623,468** காரணமாக இருப்பது மாவட்ட செயலகங்களுக்கு ஒதுக்கீடுகள் பெற்றுக் கொடுத்ததன் மூலம் மேற்கொள்ளப்பட்ட, திணைக்களத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் நிர்மாணப் பணிகளுக்கான செலவுகள் **New CIGAS** நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப மீதிகளாக (Open-Bal-Add) வருட இறுதியில் உட்படுத்தப்பட்டமையாகும்.<br><br>அரச கணக்குகள் திணைக்களத்தின் **SA82** அறிக்கையில் மற்றும் நிதிக் கூற்றுக்களில் **9152** | அரச கணக்குகள் வழிகாட்டலின் படி திணைக்கள புத்தகங்களின் மீதிகள் மற்றும் திறைசேரி கணக்குகளின் மீதிகளினை ஒப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்களின் கணக்குகளுடனான வழுவாத் தன்மையினை பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் கணக்குகளுடனான வழுவாத்தன்மையினை பேணப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை. | கீழுள்ள பெறுமானங்களுக்கிடையே வேறுபாடாக காட்டப்பட்டுள்ள ரூபா **129,580** காரணமாக இருப்பது வருடத்தில் சேர்க்கப்பட்ட முன்னைய வருடங்களுக்கான இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதியாகும்.அது அரச கணக்குகள் திணைக்களத்தின் “**SA82**” பிரகாரம் ஆரம்ப மீதிகளின் மொத்தத் தொகையாக ரூபா 129,580 (Open-Bal-Add) குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நிதி நிலைமைக் கூற்றில் அவை இரண்டினதும் மொத்தத் தொகையாக ரூபா **95,791,487** காட்டப்பட்டுள்ளமையினை குறிப்பிட விரும்புகின்றேன். | |
| (ii) | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டுவரும் நிர்மாணப் பணிகளுக்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 49,691,458 ஆன மூலதன செலவுகள் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தன. | அலுவலக கட்டிடங்களுக்கான கொள்வனவுகள் ரூபா 49,623,468 பெறுமதி வேறு திணைக்களங்களுக்கான ஒதுக்கீடுகளின் விடுவிப்பாகும். வருடத்தினுள் விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பெறுமதிக்கான பற்றுச்சீட்டுக்கள் அந்நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சொத்துக்களாக கணக்கிலிடப்பட்டிருப்பதுடன் அப்பெறுமதி திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் (Open-Bal- Add) கீழ் மற்றும் நிதி அறிக்கையில் ஆரம்ப மீதியின் கீழ் குறிக்கப்பட்டுள்ளது. | வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினங்கள் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கிலிடப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | திணைக்களத்தின் தொழிற் பயிற்சி நிறுவனங்கள், புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் மற்றும் வழிகாட்டல் மத்திய நிலையங்களின் கட்டிடங்கள் நிர்மாணிப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடங்கள் பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிப்புக்களுக்காக சென்ற ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கிரயம் செய்யப்பட்டு வரும் வேலைகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அந்நிர்மாணிப்புக்கள் முடிக்கப்பட்ட கட்டிட கிரயமான இனங்கண்டு எண்ணப்பட்டு, நிதிக் கூற்றுக்களில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களாக கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் நிதியல்லாத சொத்துக்கள் பற்றிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக விபரமான அட்டவணை முன்வைக்கப்படாமை காரணமாக அவற்றின் கிரயத்தினை இனங்கண்டு கொள்வது மற்றும் கிரயத்தினை எண்ணப்பட்ட விதம் குறித்து பரீட்சிக்க முடியாதிருந்தது. | நிர்மாணிப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அந்தந்த பற்றுச்சீட்டுக்கள் முன்வைக்கும் போது மேற்கொள்ளப்படும் வேலையாக கணக்கிலிடப்படுவதுடன் சகல நிர்மாணிப்புக்களும் செய்து முடித்ததன் பின்னர் அப்பெறுமானத்தினை கட்டிடமாக கணக்கிலிடுவது முறைமையாக உள்ளதுடன் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் தொடர்பில் இன்னும் கட்டிட வேலைகள் முடிக்கப்பட்டில்லாமையால் அச்சொத்துக்கள் கட்டிடமாக கணக்கிலிடப்படுவது பிரச்சினைக்குரியதாகும். ஆகையால் சகல நிர்மாண பணிகளும் முடிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளின் மொத்தத்தினை கட்டிடமாக கணக்கிலிடும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | நிர்மாணப் பணிகள் பூரணப்படுத்தப்பட்ட கட்டிடங்களின் கிரயத்தினை நிதிக் கூற்றுக்களில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள் ஆக கணக்கிலிடப்பட வேண்டும். |

**2.	நிதி மீளாய்வு**

**2.1	செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்த வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மொத்தம் ரூபா 9,800,000 ஆகும். அச்செலவின விடயங்களில் ரூபா 2,135,000 ஆன ஒதுக்கீடுகள் நி.பி 66 மூலமாக வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதும் அந்த செலவின விடயங்களின் மீதி முறையே நூற்றுக்கு 9 முதல், நூற்றுக்கு 54 வரையிலான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய சீரற்ற சூழல் காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டள்ள செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் மீதியானதுடன் அம்மீதியான ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தப்பட்டு அத்தியாவசியமான செலவினங்கள் மேற்கொள்வதற்காக நி.பி 66 மாற்றல் மூலமாக ஒதுக்கீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. | அளவினை விஞ்சிய ஒதுக்கீட்டினை ஏற்பாடு செய்து கொள்ளப்படாது மீண்டெழும் செலவினங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 09 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்த ரூபா 358,200,000 ஆன வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மதிப்பீடுகள் போதுமானதாக இல்லாதிருந்தமையினால் வேறு செலவின விடயங்களிலிருந்து ரூபா 42,500,000 ஒதுக்கீடுகள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. அதேபோன்று 14 வேறுபட்ட மீண்டெழும் செலவின விடயங்களிலிருந்து ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்த ரூபா 250,350,000 ஆன வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் மீதமானதன் காரணமாக வேறு செலவின விடயங்களுக்காக மாற்றம் செய்து கொள்ளப்பட்டிருந்தது. | 2021 வருடத்தினுள் நாட்டில் நிலவிய சீரற்ற சூழல் காரணமாக தொழிற் பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டமையினால் செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் பெருமளவில் மீதியாயின. அதனால் மேலதிக ஒதுக்கீடுகளின் தேவைப்பாட்டினை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மேலதிக ஒதுக்கீடுகள் பெற்றுக் கொள்ளப்படாது எதிர்பாராது மீதியாயுள்ள ஒதுக்கீடுகள் உபயோகப்படுத்தப்பட்டன. | செலவின விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கீடு களிலிருந்து ஆகக் கூடிய ஏற்பாடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 கொண்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் 3.3 பந்தி மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 94 ஏற்பாட்டின் படி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டியுள்ள பேரிலும் 05 செலவின விடயங்களுக்கான 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ரூபா 2,433,292 ஆன பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளினை பொறுப்புக்களுக்கான கூற்றில் காட்டப்பட்டிருக்க வில்லை. | செலவின விடய இலக்கம் 216-02-03-1203 தொடர்புடைய ரூபா 120,000 பொறுப்புக்கள் திணைக்களத்தின் பட்டியல்களின் படி சரியான முறையில் இனங்கண்டு கொள்ளப்படவில்லை.<br><br>அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2012/02 படி இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் புது சிகாஸ் வலையமைப்பு சொற் தொடரினை தரவு ஏற்றம் செய்தல் 2022 சனவரி 31 இற்கு முன்னர் மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததனால் இதுவரை இத்திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள பொறுப்புக்கள் மாத்திரம் கணக்கிலிடப்பட்டது. ஆகையால், அதன்பிறகு செலுத்துவதற்கு முன்வந்த பொறுப்புக்களுக்கான பெறுமானங்கள் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்படவில்லை. | நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிதிக் கூற்றுக்களில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 06 செலவின விடயங்களுக்கான சேமிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மொத்தம் ரூபா 2,334,751 ஆக இருந்ததுடன் அச்செலவின விடயங்களுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொறுப்புக்களின் மொத்தம் ரூபா 8,249,966 ஆக இருந்தமையால் ஒதுக்கீடுகளை விஞ்சிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 5,915,215 ஆகும். | பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக இலங்கை முழுதும் தொழிற்பயிற்சி நிலையங்கள் அடைக்கப்பட்டுள்ளமையினால் மற்றும் சில அத்தியாவசிய கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் ஒதுக்கீடு முகாமைத்துவம் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் வரவழைப்பதில் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில | ஒதுக்கீடுகள் விஞ்சப்படாமல் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். |

பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமையால் ஒதுக்கீடுகளை விஞ்சிய பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) நி..பி.. 1646 | - | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் மாதத்தின் பின்னர் அடுத்த மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் திணைக்களத்தின் வாகனச் சவாரி தொடர்பான மாதாந்த பொழிப்பு மற்றும் சவாரி அட்டவணை கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்டிருக்க வில்லை. | இதனகத்திற்கு பின்னர் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணங்களின் படி வாகனச் சவாரி மாதாந்த பொழிப்பு மற்றும் சவாரி அட்டவணைகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| (ii) நி..பி.. 104(3) | 68,850 | திணைக்கள வாகனமொன்று விபத்துக்குள்ளாகி ஏற்பட்ட இழப்பு மற்றும் சேதங்கள் தொடர்பில் பரீட்சிப்பு நடாத்துவதற்கு | 2021 வருடம் இத்திணைக்களத்தில் நடந்த வாகன விபத்துக்கள் தொடர்பான சகல திருத்த வேலைகளுக்கான | நிதிப் பிரமாணத்தின் படி வாகன விபத்துக்களினால் ஏற்படும் இழப்புக்கள் மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் ஆரம்ப அறிக்கையினை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | செலவுகள் சம்பந்தப்பட்ட காப்புறுதி கம்பனியினால் மீள் நிரப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. தற்போதைக்கு சகல வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 104(3) படி பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சேதங்கள் தொடர்பாக பரீட்சிப்பு மேற்கொள்ளல் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | நி..பி.. 757(2) | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை | மீளாய்வாண்டில் மற்றும் சென்ற மூன்று ஆண்டுகளில் வருடாந்த பொருட் கணிப்பின் போது தெரியவந்த குறைகள், மிகைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கு சென்ற வருடங்களில் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | குறைபாடுகளுக்கான காரணம் விசாரிக்கப்பட்டு நிறுவனத்தினை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மிகைகளை புத்தகங்களில் உட்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வருடாந்த பொருட் கணிப்பின் போது தெரிய வந்துள்ள குறைபாடுகள் மிகைக்ள தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 2.4 அதிகார மற்றும் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 4.1 பந்தியின் ஏற்பாட்டின் படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ஆகக்கூடிய தொகையாக ரூபா 1000 மேற்படாதவாறு தொலைபேசி பற்றுச்சீட்டினை மீள் நிரப்புவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக பணிப்பாளரின் இச்சைப்படி மாவட்ட | சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கத்தின் கோரிக்கைப் படி தொலைபேசி கொடுப்பனவினை வழங்குவதற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளரினால் மாவட்ட | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக உத்தியோகத்தர்களின் கடமைக்கான தொலைபேசி கட்டணம் முறையான மீள் நிரப்புவதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மற்றும் வைத்தியசாலைகளுக்கு சமீபமாக அமைந்துள்ள தொழிற் பயிற்சி மத்திய நிலையங்களில் இணைந்து சேவையாற்றும் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொலைபேசி கொடுப்பனவு தொகையாக ரூபா 1,000 ஆனது 2020 செப்தெம்பர் முதல் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி முறையான அதிகார பலமின்றி 2020 ஆம் வருடம் 238 உத்தியோகத்தர் களுக்கு ரூபா 238,000, 2021 ஆம் வருடம் 391 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,695,000 என மொத்தம் ரூபா 4,933,000 தொலைபேசிக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், தொழிற் பயிற்சி நிலையங்கள், சிறுவர் வழிநடத்தல் மத்திய நிலையங்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையினைக்கு அடிமைப்பட்ட பயிற்சி நிலையங்களில் சேவையாற்றும் திணைக்களத்தின் 31 சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு 2021 மார்ச் முதல் 2022 மார்ச் வரையிலான காலத்தினுள் தொலைபேசி கொடுப்பனவாக ரூபா 372,000 வழங்கப்பட்டிருந்தது. | செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் இணைந்து சேவை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 1,000 தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு ஏனைய உத்தியோகத்தர்களும் அதனை பெற்றுத்தரும் படி விடுவிக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று அமைச்சின் செயலாளர் அதனை சம்பளத்துடன் வழங்குவதற்கு அங்கீகாரம் கொடுத்துள்ளார். | மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான 2021 வருடாந்த செயற்படு திட்டத்தினை நடப்பாண்டு | 2021 வருடாந்த செயற்படு திட்டத்தினை நடப்பாண்டு இறுதியில் தயாரிக்கப்பட்டு சமூக சேவைகள் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் படி மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பார்வைக்காக 2021 ஏப்ரல் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய வருடாந்த செயற்படு திட்டத்தினை உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 வருடாந்த செயற்படு திட்டத்தினை உள்ளவாறாக அத்திகதியில் தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 20 ஆந் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது. இதனகத்திற்கு பின்னர் இக்ககுறைபாட்டினை நிவர்த்தி செய்யப்பட்டு உரிய காலத்தினுள் முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பெற்றுக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | தயாரிக்கப்பட்டிருந்த செயற்படு திட்டத்தில் கீழ் காணும் குறிக்கோள்களினை அடைந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களினை செயற்படுத்துவதற்கான கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.<br>➢ உபாதைக்குள்ளான மக்களின் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பலவித பிரச்சினைகள் குறைப்பதற்காக தலையீடு செய்தல் மற்றும் அவர்களை வலுவுறச் செய்தல்.<br>➢ சைகை மொழியினை ஏற்றுக் கொள்ளல்.<br>➢ போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை வதிவிட புனர்வாழ்வழித்தல்.<br>➢ பலவித சமூகப் பிரச்சினைகளுக்கு ஆளானவர்களுக்காக முறையான வழிகாட்டலினை பெற்றுக் கொடுத்தல். | உபாதைக்குள்ளான மக்களின் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பலவித பிரச்சினைகளை குறைப்பதற்காக தலையிடுதல் மற்றும் அவர்களை வலுவுறச் செய்தல், சைகை மொழியினை ஏற்றுக் கொள்ளல் மற்றும் மேம்படுத்தல், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை வதிவிட புனர்வாழ்வழித்தல், தொழிற் பயிற்சியளித்தல் மற்றும் அவர்களை சமூகமயப்படுத்தல் ஆகிய அம்சங்கள் தொழிற்படு திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டில்லாத போதிலும் அவ்வம்பசங்கள் தொடர்பாக 2021 வருடத்தினுள் அதிகப்படியான செயற்பாட்டு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதுபோன்றே 2022 வருடம் செயற்படு திட்டத்தை தயாரிக்கும் போது அவ்வம்சங்களுக்கான திட்டங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. | குறிக்கோள்களினை நிறைவேற்றிக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்தும் அலுவல்களினை திட்டமிடப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த விளைவுகள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உபாதைகளுக்குள்ளானவர்களை புனர்வழிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த சமூக அடிப்படையிலான உபாதைக்குள்ளான புனர்வாழ்வு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான தேசிய செயற்பாட்டு குழுக்கள் சென்ற 27 மாத காலமாக செயலிலக்கப்பட்டிருந்தமை சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தினை ஆராய்தலுக்குட்படுத்தல், உபாதைகளுக்குட்பட்டவர்களின் உற்பத்திகளினை தரப்படுத்தல் மற்றும் சந்தையினை அறிமுகப்படுத்தல் ஆகிய காரியங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமையினால் உபாதைக்குள்ளானவர்களின் அபிவிருத்தி, கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக தரப்புகள் மீது தேசிய மட்டத்திலான சார்பான முடிவுகள் மேற்கொள்ளுவதற்கு இயலாது போய் இருந்தது. மேலும் திட்டங்களை செயற்படுத்துவதில் செயற்திறன் மற்றும் உற்பத்தி திறன் பலவீனப்படல் உபாதைக்குள்ளானவர்களின் உற்பத்திகளினை இனங்காணல், தரப்படுத்தல், பயிற்சியளித்தல், தரமான உற்பத்திப் பொருட்களை தெரிவு செய்தல் மற்றும் உற்பத்திப் பொருட்களை தேசிய மட்டத்தில் முன்வைத்தல் ஆகிய எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 12,500,000 ஒதுக்கீடு ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் 25 மாவட்ட செயலக அதிகார பிரதேசங்களுக்காக ரூபா 7,703,248 ஆன ஒதுக்கீடு மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக போக்குவரத்து கட்டுப்பாடு அமுல்ப்படுத்தப்பட்டிருந்தமையினால் உபாதைக்குள்ளானவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை ஒன்று கூட்ட இயலாத நிலைமை காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை 2021 வருடம் நடாத்தாமல் இருப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டதுடன் 2022 வருடம் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>பிரதேச செயலகம் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டு கோள் மற்றும் திட்ட அறிக்கைகளினை கவனத்திற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட ஒதுக்கீடுகள் மாவட்ட செயலாளரிடம் விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சமூக அடிப்படையிலான உபாதைக்கான புனர் வாழ்வு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர் பார்த்த நோக்கினை அடைவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப் படுவதற்கு முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டும். |

விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தும் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்குப் மற்றும் ஆராய்வதற்கு இயலாது போய் இருந்தது.

### 3.3 திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள உபாதைக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக தமிழ் மொழி மூலம் தொழிற் பயிற்சியினை பெற்றுக்கொடுப்பதற்காக 2017 வருடம் நிர்மாணப் பணியினை ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையத்தின் நிர்மானப் பணிகள் 2022 ஏப்ரல் 30 வரையிலும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு மீளாய்வாண்டில் தொழிற் பயிற்சி அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முடியாது போய் உள்ளது. | இந் நிலையத்தில் பாட நெறிகள் ஆரம்பிப்பதற்கும் மற்றும் நிலைய அலுவல்களை பேணிச் செல்வதற்கு ஏதுவாக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் மேற்கொள்ளப்படும் சமயலறை மற்றும் சிற்றூண்டிச்சாலை மாத்திரம் நிர்மாணிக்கப்படவுள்ளது. | கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் தொழிற் பயிற்சி அலுவல்கள் ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கிரயம் ரூபா 290,998 ஆன புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் 07 பத்திரிகை வகைகளின் பிரதிகள் 22,460 ஐந்து வருட காலத்திற்கும் மேலாக உபயோகப்படுத்தப்படாது களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. | திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களின் அனுபவங்களை மையப்படுத்தி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் கொண்ட ஆக்கங்கள் மற்றும் திணைக்களத்தின் பொறுப்புக்கள் குறித்த பத்திரங்கள், திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படும் பற்பல செயல் அமர்வுகளின் போது விநியோகிப்பதற்கு ஏற்பாடு | புத்தகங்கள் சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் பயனுள்ள வகையில் பாவனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் நூலகங்களிலும் பகிர்ந்தளிப்பதற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | தொழிற் பயிற்சி நிலையங்களிலினை நூல் நிலையங்களுக்காக 2019 வருடம் ரூபா 130,815 கொள்வனவு செய்யப்பட்ட காவிய நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் நாவல்கள் ஆகிய புத்தகங்கள் 288 நூல் நிலைய பாவனைக்காக விநியோகம் செய்யப்படாது 02 வருடங்களுக்கும் மேலான காலமாக களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்தன. | 2019 வருடம் கொள்வனவு செய்யப்பட்ட காவிய நூல்கள் மொழி பெயர்ப்பு மற்றும் நாவல்கள் எதிர் காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களின் நூல் நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கொள்வனவு செய்யப்பட்ட காவிய நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள், -- ஆகியன நூல் நிலையங்களின் பாவனைக்காக தாமதமின்றி பகிர்ந்தளிப் பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தொழிற் பயிற்சி நிலையங்கள், புனர் வாழ்வு மையங்கள் மற்றும் வழிகாட்டல் மையங்கள் தாபிப்பதற்காக திணைக்களத்திற்கு நன்கொடையாக கிடைக்கப் பெற்ற சுமார் 33 ஏக்கர் பரப்பு அளவினைக் கொண்ட 05 காணிகள் நன்கொடையளிக்கப்பட்டு 10 வருட காலத்திற்கு மேலாகியும் அவற்றின் சட்ட பூர்வ உரிமையினை உறுதிப்படுத்தப்பட்டு அக்காணிகளின் மற்றும் அதனுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காணி மற்றும் கட்டிடங்களினை கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | தொழிற் பயிற்சி நிலையங்கள், திறன் அபிவிருத்தி மத்திய நிலையங்கள் , புனர் வாழ்வு மற்றும் வழிகாட்டல் மத்திய நிலையங்கள் புனர்வாழ்வு மற்றும் வழிகாட்டல் மத்திய நிலையங்கள் தாபிப்பதற்காக திணைக்களத்திற்கு நன்கொடையாக கிடைக்கப் பெற்ற காணி அளவுகளில், சீதுவை தொழிற் பயிற்சி நிலையத்திற்கு உரிய காணியினைத் தற்போது கையேற்கப்பட்டு பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலமாக பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் முடிக்கப் பெற்று எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் -- பின்னர் அதனை கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திணைக்களத்திடம் காணிகள் சட்டபூர்வமாக | காணிகளின் சட்டபூர்வ உரிமையினை உறுதி செய்யப்பட்டு கட்டிடங்கள் உள்ளிட்ட மதிப்பீட்டு பெறுமதியினை கணக்கிலிடு வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| | | கையேற்பதற்கு நீண்ட செயற் தொடரினை மேற்கொள்ளப்பட்ட மையினால் மீதமுள்ள காணிகளை கையேற்பது சம்பந்தமாக முன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அக்காணிகள் சட்டபூர்வமாக கையேற்கப்பட்டதன் பின்னர் பெறுமான மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலமாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | 11 தொழிற் பயிற்சி நிலையங்கள் தாபிக்கப்பட்டிருக்கும் காணிகளின் சட்டபூர்வ உரிமையினை திணைக்களம் கையேற்கப்படாமை மற்றும் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டில்லாமை காரமணமாகப் சென்ற 10 வருட காலத்திற்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் நிதியல்லா சொத்துக்களாக கணக்கிடப்படாது கணக்குகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன. | தொழிற் பயிற்சி நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவற்றின் பெறுமதிகளினை பெற்றுத் தரும் படி பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடம் அறிவித்துள்ளதுடன் தற்போதைக்கு இரு நிலையங்களின் மதிப்பீட்டு பெறுமானங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மீதமுள்ள நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமானங்கள் கிடைத்ததன் பின்னர் சம்பந்தப்பட்ட பெறுமானங்கள் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தொழிற் பயிற்சி நிலையங்கள் தாபிக்கபட்டிருந்த காணிகளின் சட்டபூர்வ உரிமையினை கையேற்கப்பட்டு மதிப்பீட்டு பெறுமதியினை கணக்கிலிடு வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சீதுவை தொழிற் பயிற்சி நிலையத்தில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கின் போது காணாமற்போயிருந்த ரூபா | சீதுவை தொழில் பயிற்சி நிலையத்தில் நடந்த களவாடல் தொடர்பான நி.பி 104(3) கீழான இழப்பீடுகளுக்கான ஆரம்ப அறிக்கையினை அமைச்சு | களவாடலின் போது காணாமற் பொயிருந்த சொத்து தொடர்பாக இழப்புக்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | 50,000 பெறுமதி வாய்ந்த தொலைக்காட்சி இயந்திரம் தொடர்பாக இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிக்கான கூற்றில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயலாளரின் கவனத்திற்கு அனுப்பபட்டுள்ளது. அ.நி.அ 01/2020 பிரகாரம் இச் சேதத்திற்கான அதிகார பலம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி எல்லையினுள் இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான பணிப்பினை திணைக்கள தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் பணிப்பிணை பெற்றுக் கொண்டதன் பின்னர் முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போதைக்கு சேதத்தினை அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. | தள்ளுபடிக்கான கூற்றில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | றாகமை தொழில் பயிற்சி நிலையத்தில் சென்ற வருடம் மேற்கொள்ளப் பட்டிருந்த களவாடலின் போது ரூபா 70,800 பெறுமதி வாய்ந்த பொறிகள் மற்றும் 06 இயந்திர சாதன உருப்படிகள் காணாமற் போய் இருந்தன. அவ் இழப்பினை, இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிக்கான கூற்றில் காட்டப்படாததுடன் நி.பி 104 ஏற்பாடுகளுக் கமைவாக தகுந்த முறையில் செயற்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | றாகமை தொழில் பயிற்சி நிலையத்தில் நடந்த களவாடல் தொடர்பான நி.பி 104(4) கீழான இழப்பீடுகளுக்கான இறுதி அறிக்கையினை அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அ.நி.சு.01/2020 படி இச் சேதத்திற்கான அதிகார பலம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி எல்லையினுள் இருப்பதால் சம்பந்தப்பட்ட புத்தகங்களிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான பணிப்பினை திணைக்களத் தலைவரிடம் பெற்றுக் கொள்வதற்கும் பணிப்பிணை பெற்றுக் கொண்டதன் பின்னர் முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் தற்போதைக்கு சேதத்தினை அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. | களவாடலில் காணாமற் போன சொத்து தொடர்பான நட்டங்கள் மற்றும் தள்ளுபடி தொடர்பான கூற்றில் வெளிப்படுத்தப்படுவ தற்கும் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி செயற்படுவதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பாவனை மேற்கொள்ளப் படாமல் திணைக்கள பிரதான களஞ்சிய சாலையில் 03 வருடம் முதல் 08 வருட நீண்ட காலமாக | பாவனை மேற்கொள்ள இயலாத 6 பாவனைப் பொருட்கள் மாத்திரம் இனங்காணப் பட்டதுடன் அவற்றினை 2020 வருடத்திற்கான பிரதான | காலாவதியாகுதல் மற்றும் அழிவுக்குட்படுதல் ஆகிய காரணங்களினால் சேதமடைந்த |

| | | |
|---|---|---|
| களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 24 பாவனைக்கான உருப்படிப் பொருட்கள் காலாவதியாகப் மட்டும் மற்றும் அழிவுக்குள்ளாகியும் இருந்தன. இவ்வாறு சேதத்திற்குள்ளான பொருட்கள் சம்பந்தமாக நட்டம் மற்றும் தள்ளுபடிக்கான கூற்றில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அச் சேதத்திற்குள்ளான தொகை தொடர்பாக கணக்கினை மேற்கொள்ளப்பட்டு நிதிப்பிரமாணம் 108 ஏற்பாடுகளுக்கு அமைய புத்தகங்களிலிருந்து தள்ளுபடி செய்வதனையோ அல்லது தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதையோ செய்யப்படவில்லை. | அலுவலக ஏல விற்பனையின் போது ஏலத்தில் விடப்பட்டன. | தொகையினை தொடர்பாக தள்ளுபடிக்கான கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் அத் தொகைத் தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 வருடம் முதல் 2018 வருடம் வரையிலான சுமார் 02 வருட காலமாக ஒடு நடவடிக்கையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றினை 2018 வருடம் தள்ளுபடி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு பின்னர் திருத்தப்பட்டு பாவனைக்கு பொருத்தும் என 2019 வருடம் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன் படி 2020 வருடம் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 320,020 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2022 ஏப்ரல் 30 திகதி வரையிலும் வாகனத்தினை ஓட்டத்திற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாது போய் இருந்தது. | இவ் வாகனத்தை ஓடுதலுக்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வருவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையின் படி சம்பந்தப்பட்ட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மதிப்பீட்டினைக்கு குழுவொன்றின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. திருத்த வேலைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியுள்ளார். மீதமுள்ள திருத்த வேலைகளுக்கான செலவினை தற்போதுள்ள ஒதுக்கீட்டு வரையினுள் மேற்கொள்வதற்கு | வாகனம் திருத்தப்பட்டு ஓடுவதற்கு தகுந்த நிலைக்கு கொண்டு வர முடியுமாயின் துரித கெதியில் திருத்த வேலை முடிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு முடியாது போயின் தள்ளுபடி செய்வதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாதிருப்பதனால் விருப்பமான நிலையத்திற்கு இவ் வாகனத்தை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளுமாறு கொம்பட்றோலர் ஜெனராலிடம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1956 வருடம் முதல் 2021 வருடம் வரையிலான 65 வருட காலத்தினுள் தாபிக்கபட்டுள்ள தொழில் பயிற்சி நிலையங்கள், புனர் வாழ்வு மையங்கள் மற்றும் 14 வழிகாட்டல் மையங்களுக்கான காணிகளின் சட்டபூர்வ உரிமையினை கையேற்பதற்காக மிக நீண்ட காலம் கழித்துள்ள போதிலும் அனு இயலாது போயிருந்தது. இது தொடர்பில் இலக்கம் 04/2018 மற்றும் 02/2019 கொண்ட சொத்துக்களுக் கான முகாமைத்துவ சுற்றறிக்கைகளில் அறிமுகம் செய்யப்பட்டிருந்த வழிகாட்டல்கள் மீது திணைக்களத்தின் கவனம் போதிய அளவில் செலுத்தப்படடிருக்கவில்லை. மேலும் முறையாக சட்டபூர்வ உரிமையினை கையேற்கப்படாது கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்தல் காரியங்களுக்காக சென்ற 05 ஆண்டு காலத்தினுள் ரூபா மில்லியன் 500 அதிகப் படியான தொகையினை செலவிடப்பட்டுள்ளது. | தற்போதைக்கு அவ்வந்த பிரதேச செயலக பகுதிகளில் முறையாக கையேற்கப்பட்டு முடிக்கப்பட்ட காணிகளின் எண்ணிக்கை 08 ஆகும். அதன் படி மீதமுள்ள காணிகளையும் கையேற்றுக் கொள்வதற்கான அலுவலகங்கள் அக் காணிகள் அமைந்துள்ள பிரதேச செயலக பகுதி மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. | காணிகளுக்கான சட்டபூர்வ உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக அரச ஒதுக்கீடு பாவனை செய்யப்பட வேண்டும். |

## 4. பேண்தகு அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உபாதைக்குட்பட்ட நபர்களுக்காக தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி மேற்கொள்ளல், புது தொழிற் பயிற்சி நிலையங்கள் நிர்மாணித்தல் ஆரம்ப குழந்தை பருவத்திலுள்ள பிள்ளைகளின் உபாதைகளின் குறைப்பதற்கான தலையீடு மேற்கொள்வதன் கீழான இலக்கினை அடைந்து கொள்வதற்கான செயலாற்றல் முன்னேற்றம் நூற்றுக்கு 60 க்கான சராசரி மதிப்பீட்டில் காணப்பட்டது. | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை அடைந்து கொள்வதற்கான முன்னேற்றம் நூற்றுக்கு 60 க்கான சராசரி மதிப்பினை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், நாட்டினுள் பரவியிருந்த கொவிட் 19 தொற்று நிலைமை இதற்கான காரணியாக இருந்தது. | இலக்கிடப்பட்ட காரியங்களில் போதியளவிலான செயலாற்றல் முன்னேற்றத்தினை பேணிச் செல்வதற்கு தேவையான அலுவல்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக நேரடி செயற்பாட்டினை மேற்கொள்ளும் மூன்றாம் மட்டத்திலான நிலைய பொறுப்பதிகாரி பதவிகள் 05, இரண்டாம் மட்ட சேவைக்கான பதவிகள் 50 மற்றும் ஆரம்ப மட்ட சேவைக்கான பதவிகள் 06 ஆக மொத்தம் 61 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன.<br><br>வெற்றிடமான நிலைய பொறுப்பதிகாரி பதவிகள் 05 நிரப்புவதற்காக 2020 வருடம் விண்ணப்பம் கோரப்பட்டு அதற்கான அலுவல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது ஏற்பட்டிருந்த நீண்ட கால தாமதத்தின் காரணமாக இது வரையிலும் ஆட் சேர்ப்பினை மேற்கொள்ளப்படவில்லை. | நிலைய பொறுப்பதிகாரி பதவிக்காக நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு அரச சேவைகள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளமையினால் 05 நிலைய பொறுப்பதிகாரி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினை தொடர்பான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஊழியர் ஆட்சேர்ப்பினைக்காக ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது வரை நியமனம் மேற்கொள்ளப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினை பிற்போடப்பட்டமையினால் இது வரை ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளப்பட முடியாது உள்ளது. ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினை | திணைக்களத்தின் குறிக்கொளினை அடைந்து கொள்வதற்கு நேரடி செயற்பாட்டினை மேற்கொள்ளும் வெற்றிடங்களுக் கான பணிக் குழாயினை ஆட்சேர்ப்பு செய்வதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | |
| (ஆ) | மூன்றாம் மட்டத்திலான 225 சமூக சேவைகள் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவியதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாயில் 47 சதவீதமாகும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 480 சமூக சேவைகள் உத்தியோகத்தினர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஆலோசனைப் படி ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | வெற்றிடங்களாக நிலவும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவிகளுக்காக துரித ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |